**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை – 2016**

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும், இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான ஒரு அறிக்கை சபையின் தலைவருக்கு 2018 சனவரி 12 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

**1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை**

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக்கூற்றிலும் வருமானக் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது போனது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராய மறுப்பு**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிறுவனம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

சபைக்குச் சொந்தமான 23 தோட்டங்கள் தொடர்ச்சியாக நட்டம் அடைந்து வருவதன் அடிப்படையிலும் செலுத்த வேண்டிய நியதிச்சட்ட பொறுப்புக்களின் அளவு அதிகரித்துக் காணப்படுதலின் காரணமாகவும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் தேறிய சொத்துக்களும் தொழிற்படு மூலதனமும் முறையே ரூபா 340,140,366 மற்றும் ரூபா 1,845,703,984 மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தன. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய சொத்துக்களின் வீழ்ச்சி 37 சதவீதம் மற்றும் தொழிற்படு மூலதனத்தில் வீழ்ச்சி 5 சதவீதமாக இருந்ததுடன் இவ்வாறான நிலைமையின் அடிப்படையில் மேலும் திறைசேரியின் அல்லது அரசாங்கத்தின் நிதி உதவியின்றி சபையினைப் பேணி வருதலில் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 01**

பொதுப் பாவணைப் பிரிவின் ரூபா 13,002,883 தொகையான கடன்பட்டோர் மீதியில் அறவிடமுடியாக் கடனாக ரூபா 857,604 ஒதுக்கீடு செய்தல் இடம்பெற்றிருந்தும் அது குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்படாது தேறிய பெறுமதியான ரூபா 12,145,279 மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 07**

(i) மீளாய்வாண்டில் பணமாகச் செலுத்தப்படாத ரூபா 196,480 தொகையான நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்குரிய மிகைக் கட்டணச் செலவுகள் நியமத்தின் 20 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியற்ற ஒரு விடயமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன்னைய நட்டத்தில் செம்மையாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்காக பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானம் ரூபா 71,130 தொகையானது வரிக்கு முன்னைய நட்டத்திலிருந்து கழிக்கப்பட்டு முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாகக் காட்டப்பட வேண்டிய போதிலும் வரிக்கு முன்னைய நட்டத்துடன் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(iii) அரசாங்கத்தின் வணிக வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வங்கி கடனுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 16,443,117 தொகையான கடன் தீர்த்து வைக்கப்பட்டிருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு நடவடிக்கைகளின் கீழ் அது ரூபா 15,150,616 காசு வெளிப்பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 1,292,501 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iv) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்தல் பணமாகச் செலுத்தப்பட்ட பணிக்கொடையின் பெறுமதி என்பன முறையே ரூபா 44,685,417 மற்றும் ரூபா 9,383,451 ஆக இருந்த போதும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் முறையே ரூபா 40,639,179 மற்றும் ரூபா 8,425,958

ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 3,088,745 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(v) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வேலைக்குச் சமூகமளித்தல் மிகையூதியத்திற்கு ஒதுக்கீடு செய்தல் மற்றும் பணமாகச் செலுத்திய மிகையூதியம் முறையே ரூபா 3,277,158 மற்றும் ரூபா 3,106,081 ஆக இருந்த போதிலும் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் முறையே ரூபா 2,372,806 மற்றும் ரூபா 2,979,183 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 435,300 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(vi) மீளாய்வாண்டிற்கான ரூபா 32,290,549 தொகையான பெறுமானத் தேய்வு மற்றும் காலக்கழிவுச் செலவு காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 32,732,929 ஆகச் செம்மையாக்கியதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 442,380 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(vii) மீளாய்வாண்டின் போது முதிர்ச்சியடையாத உயிர்வாழ் சொத்துக்களிலிருந்து முதிர்ச்சியடைந்த உயிர்வாழ் சொத்துக்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்த ரூபா 18,218,710 தொகையான நிதியற்ற செலவுகள் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலில் வெளிக்கள அபிவிருத்திச் செலவின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்தது.

(viii) மீளாய்வாண்டிற்காக நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் நடைமுறை வேலைக்காக செய்யப்பட்ட செலவுகள் ரூபா 2,125,980 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது அது ரூபா 20,805,107 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 18,679,127 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ix) இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 2,127,249 உதவுதொகைப் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 2,400,224 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசு உட்பாய்ச்சல் ரூபா 272,975 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 16**

(i) ரூபா 17,925,625 கிரயமான முதிர்ச்சியடைந்த பயிர்களுக்கான (Mature Plantation Vested) 2011 ஆம் ஆண்டிலிருந்து உரிய பெறுமதியினை மிகைத்து காலக்கழிவு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 594,554 மொத்த தொகையான காலக்கழிவு அதிரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்துக்கு பெறுமானத்தேய்வு செய்தலானது அச் சொத்தைப் பயன்படுத்துவதற்காக ஆயத்தமான நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னர் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபை ஸ்தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ரூபா 8,699,304 கிரயமுள்ள ஏனைய சொத்துக்கள் (Other Vested Assets) தொடர்பாக 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பெறுமானத்தேய்விற்கு ஏற்பாடு செய்யப்படாதிருந்ததுடன் மீள் மதிப்பீடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) இலக்கம் 320, டாலி வீதி எனும் விலாசத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான களஞ்சியம் மற்றும் அலுவலகக் கட்டிடம் நிதிக் கூற்றுக்களில் ரூபா 129,630 ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றை மீள் மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 32**

நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் சொத்துக்களின் நிதி நிலைமை விபரத்தினுள் தனியான தலைப்பு ஒன்றின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் ரூபா 3,651,833 கூட்டு மொத்தமான நிதிச் சொத்துக்கள் பெற வேண்டிய கணக்குகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 39**

நியமத்தின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் சொத்துக்கள் நியாயப் பெறுமதியில் செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் உரிய செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 41**

(i) வணிகப் பெறுமதியுடன் மரக்கன்றுகளின் பெறுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக ஆயுள் கணிப்பீட்டு மதிப்பீடு (Acturial Valuation) மேற்கொள்ளப்படாததன் காரணமாக பொதுப் பாவனை உயிர் வாழ் சொத்துக்களின் (Consumable Biological Asset) பெறுமதி கணக்குகளின் மூலம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 21,041,223 பெறுமதியான முதிர்ச்சியடையாத மரப் பயிர்ச்செய்கைக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயத்தை முதிர்ச்சியடையாத பொதுப்பாவனை உயிர்வாழ் சொத்துக்களின் கீழ் அறிக்கையிடுவதற்குப் பதிலாக இடைப் பயிர் பயிர்ச்செய்கையின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கை

இடைப் பயிர் பயிர்செய்கைகளுக்காக முதிர்ச்சியடையாத பயிர்களிலிருந்து முதிர்ச்சியடைந்த பயிர்களுக்கு மாற்றப்படுகின்றன காலத்தை உறுதியாக கணக்கீட்டுக் கொள்கையின் மூலம் வெளிப்படுத்தப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அப்பயிர்கள் தொடர்பாக மூலதனமாக்கப்பட்ட ரூபா 19,881,889 தொகையான செலவுகள் முதிர்ச்சியடைந்த பயிர்களின் கீழ் அறிக்கையிட முடியாதிருந்தது.

### 2.2.4 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முதிர்ச்சியடைந்த பயிர்கள் தொடர்பாக ரூபா 82,143,685 தொகையான பெறுமானத் தேய்வு குறைத்தும் மீளாய்வாண்டின் போது ரூபா 4,119,729 தொகையான பெறுமானத் தேய்வு அதிகரித்தும் கணிப்பீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட வேண்டிய திரண்ட பெறுமானத் தேய்வின் பெறுமதி ரூபா 78,023,956 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது முதிர்ச்சியடையாத பயிர்களுக்காக ரூபா 319,649 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கிரயத்தை முதிர்ச்சியடையாத பயிர்கள் தொடர்பாக

மூலதனமாக்குவதற்குப் பதிலாக விபரமான வருமானக் கூற்றில் ஒரு செலவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) குறுங்காலப் பயிராகிய சோளம் மற்றும் வாழைப்பயிர்களுக்காக 2002 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது செலவு செய்யப்பட்ட ரூபா 225,955 தொகை முதிர்ச்சியடையாத பயிர்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தும் அக்கிரயத்தை கணக்குகளின் மூலம் பதிவழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது ஒன்று சேர்க்கப்பட்ட நடைமுறை வேலைகளின் பெறுமதி ரூபா 1,169,657 மற்றும் ஆண்டின் போது மூலதனமாக்கப்பட்ட பெறுமதி ரூபா 8,456,124 ஆக இருந்த போதிலும் அவை நிதிக் கூற்றுக்களில் முறையே ரூபா 28,504,581 ரூபா 21,974,671 ஆகக் காட்டப்பட்டிருந்தன.

(உ) சபையின் தோட்டங்களின் மூலம் காட்டுப் பயிர்களுக்காகவும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் மீளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்ட ரூபா 2,339,481 தொகையான செலவுகள் உரிய கணக்குகளின் கீழ் தனித்தனியாக மூலதனமாக்குவதற்குப் பதிலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) தேயிலை மற்றும் இறப்பர்களின் இறுதி இருப்பு பெறுமதியைக் கணிப்பீடு செய்யும் போது இருப்பு மெய்மையாய்வினை மேற்கொண்டு இறுதி இருப்பை கணிப்பீடு செய்வதற்குப் பதிலாக தேறிய புத்தகப் பெறுமதியான ரூபா 78,915,712 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், அந்த மீதியைக் கணிப்பீடு செய்யும் போது 1999 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட ரூபா 3,568,335 மற்றும் ரூபா 1,014,417 தொகைகளான மறை மீதிகளை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்குப் பதிலாக இறுதி இருப்பு மீதிக்கு எதிரீடு செய்து காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது ரஹதுன்கொட தோட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 234,859 தொகையான வாகன பழுதுபார்த்தல் செலவுகள் மரம் நடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஏ) சபையின் தோட்டங்களிலும் தலைமை அலுவலகத்திலும் மொத்த கிரயம் ரூபா 12,829,343 தொகையான இயந்திரங்கள் வாகனங்கள், உபகரணம், வீட்டு உபகரணம் என்பவற்றிற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 2,567,521 தொகையான பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்காததன் காரணமாக அச்சொத்துக்களின் தேறிய பெறுமதி அதிகரித்தும் செயற்பாட்டு நட்டம் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) சபையின் தோட்டங்களிலும் தலைமை அலுவலகத்திலும் மொத்த கிரயம் ரூபா 13,756,219 தொகையான வீதிகள், பாலங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் சொத்துக்களுக்காக முன்னைய ஆண்டு தொடர்பான பெறுமானத் தேய்வு ரூபா 963,119 தொகை மீளாய்வாண்டு தொடர்பாக செம்மையாக்கியதன் காரணமாக ஆண்டிற்கான நட்டம் அப்பெறுமதியால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தும்.

(ஒ) சபையின் தோட்டங்களிலும் தலைமை அலுவலகத்திலும் மொத்த கிரயம் ரூபா 4,098,997 தொகையான கணணி மற்றும் உபகரணங்களுக்காக சபையினால் கடைப்பிடிக்கப்பட்ட பெறுமானத் தேய்வு விகிதத்தை மிகைத்து பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்காக ரூபா 636,873 தொகையான பெறுமானத் தேய்வு அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்பாட்டு நட்டம் அத்தொகையால் அதிகரித்தும் சொத்துக்களின் தேறிய பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஓ) சபைக்குச் சொந்தமான கொழும்பில் அமைந்துள்ள 12 கட்டிடங்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 43,789,256 ஆக இருந்த போதிலும் அது ரூபா 10,041,700 ஆக கணக்கீடு செய்ததன்

காரணமாக நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான வருமானமும் பெறவேண்டிய வருமானமும் ரூபா 33,747,556 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான காணிக் குத்தகை வருமானம் ரூபா 44,541,880 ஆகக் காட்டப்பட்டிருந்தும் அவ்வருமானத்துடன் முன்னைய ஆண்டுகள் தொடர்பாகச் செலுத்தப்பட்ட ரூபா 15,854,592 கட்டிட வாடகை வருமானம் ரூபா 16,978,168 என்பன காணப்பட்டன. மேலும் மீளாய்வாண்டின் குத்தகை வருமானத்தை கணிப்பீடு செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த 20 காணிகளுக்கான ரூபா 459,372 தொகையான குத்தகை வாடகை வருமானம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஃ) சபையின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் உபகரணங்களுக்கு வருடாந்தம் 12.5 சதவீதம் பொறுமானத்தேய்வு செய்யப்படவேண்டிய போதிலும் அச்சொத்துக்களுக்கு 5 சதவீதத்தின் கீழ் பெறுமானத்தேய்வு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 61,438 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(க) அனைத்து முதிர்ச்சியடைந்த பயிர்களுக்காக 5 சதவீதத்தில் பெறுமானத் தேய்விற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 8,203,624 தொகையான ஏனைய முதிர்ச்சியடைந்த பயிர்களுக்காக பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கா) 1997 ஆம் ஆண்டிலும் அதற்கு பின்னைய ஆண்டுகளிலிருந்தும் நிறுவப்பட்ட வீதிகள், பாலங்கள், தொடர் அறைகள், கட்டிடங்கள் என்பவற்றிற்காக வருடாந்தம் 5 சதவீதம் பொறுமானத்தேய்வு செய்யப்படவேண்டிய போதிலும் பல ஆண்டுகளாக அனைத்து சொத்துக்களையும் உள்ளடக்கும் வகையில் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க ரூபா 40,017,533 கிரயமான அச் சொத்துக்களுக்காக 2015 திசெம்பர் 31 வரையுமான ரூபா 21,248,940 பெறுமானத்தேய்வு மற்றும் மீளாய்வாண்டிற்கான ரூபா 2,000,877 பெறுமானத்தேய்வு முழுமையாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கி) 2012 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களுக்காக 20 சதவீதத்தின் கீழும் இதற்கு முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்த இயந்திரங்களுக்காக 33 1/3 சதவீதத்தின் கீழும் பெறுமானத்தேய்விற்காக ஏற்பாடு செய்தல் சபையின் பெறுமானத்தேய்வுக் கொள்கையாக இருந்த போதிலும் 04 தோட்டங்களால் இக் கணக்கீட்டுக் கொள்கை கடைப்பிடிக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வு ரூபா 1,030,073 தொகையால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கீ) 2009 ஆம் ஆண்டின்போது ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 6,051,265 நிதிகூற்றுக்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையும் அச் செயற்திட்டங்கள் வெற்றியளிக்காதிருந்த போதிலும் அச் செலவுகளைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) முதிர்ச்சி நிலைமயின் கீழ் கணக்கீடு செய்யப்படவேண்டிய ரூபா 177,961 பெறுமதியான நாற்று மேடைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மீளாய்வாண்டின் வரை நடை பெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(கூ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலை மீதிக்குள் காட்டப்பட்டிருந்த ரூபா 3,339,466 தொகையான வருமானத் தன்மையான செலவுகளை செலவுகளாகப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கெ) 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 231,859 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் கணக்குகளிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகளின் பேரேட்டு கணக்கு மீதி ரூபா 21,974,761 ஆக இருந்த போதிலும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் அது ரூபா 21,218,114 ஆக இருந்தமையால் ரூபா 756,647 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதிர்ச்சியடையாத தேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய பயிர்களுக்கான நிதிக்கூற்றுக்களின் படியான பெறுமதிக்கும் துணைப் பதிவேடுகளின் படியான பெறுமதிக்குமிடையே முறையே ரூபா 75,508,295 மற்றும் ரூபா 88,120,005 வித்தியாசம் தோன்றியிருந்தது.

(இ) நிலையான வைப்புக்களுக்குரிய பேரேட்டுக் கணக்குகளின் படியான மீதி ரூபா 3,651,833 ஆக இருந்த அதேவேளை நிலையான வைப்பு பதிவேட்டின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 3,582,416 ஆக இருந்ததனால் ரூபா 69,417 வித்தியாசம் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீட்டு மீதி, செலுத்தவேண்டிய பணிக்கொடை, பணிக்கொடை மிகைக் கட்டணச் செலவு ஆகிய மீதிகளுக்கும் உரிய துணைப் பதிவேடுகளுக்குமிடையே ரூபா 34,993,072 வித்தியாசம் காணப்பட்டது.

(உ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் கணக்கு கூற்றுக்களின் பிரகாரம் எல்கடுவ தோட்டக் கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய பெறுமதி ரூபா 670,350 ஆக இருந்தும் அக்கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 1,185,670 ஆக இருந்தது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவ்விடயங்களைத் திருப்திகரமாகக் சான்றுறுதி செய்வதற்கோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா. | | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|---|
| (அ) | காணிகள், கட்டிடங்கள், வாகனங்கள் என்பன | 1,651,989,274 | (i) | துணைப் பதிவேடு |
| | | | (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| | | | (iii) | உருப்படி மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) | பாவனைப் பிரிவின் கடன்பட்டோர் பெறுவனவுகள் மற்றும் கலஹ தோட்டத்தின் கடன்பட்டோர் பெறுவனவுகள் | 28,986,415 | (i) | துணைப் பதிவேடு |
| | | | (ii) | கடன்பட்டோர் |

| | | | |
|---|---|---|---|
| | | | (iii) காலப்பகுப்பாய்வு மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| (இ) | செலுத்தவேண்டிய வணிகக் கணக்குகள் | 2,532,160,239 | (i) துணைப் பதிவேடு<br>(ii) கடன் கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு |
| (ஈ) | நடைபெற்றிருக்கும் மூலதன வேலைகள் | 3,197,506 | செயற்திட்ட கோவைகள் |
| (உ) | நிலையான வைப்புக்கள் | 3,651,833 | நிலையான வைப்புச் சான்றிதழ்களும் வங்கி மீதி உறுதிப்படுத்தல்களும் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செயற்படாது காணப்பட்ட ரூபா 339,549,051 பெறுமதியான கடன்பட்டோர்களிடமிருந்து பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டுவருகின்ற தீர்த்து வைக்கப்படாத விழா முற்பணம் ரூபா 654,077 தொகையை உரிய ஊழியர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல ஆண்டுகளாக தீர்த்துவைக்கப்படாத ரூபா 17,352,768 தொகையான அட்டுறு செலவுகளும் ரூபா 48,338,488 தொகையான மீளச் செலுத்தவேண்டிய வைப்புக்களும் காணப்பட்டதுடன் இப் பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையினால் பல ஆண்டுகளாக தோட்ட தொழிலாளர்களின் சம்பளங்களிலிருந்து கழித்த ரூபா 7,789,052 தொகையான தொழிற்சங்களுக்கான அங்கத்துவக் கட்டணங்களை உரிய சங்கங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பெறவேண்டிய குத்தகை வாடகை வருமானத்தில் உறுதியாக இனங்காணப்படாத ரூபா 16,619,043 வரவு மீதியும் ரூபா 2,274,185 செலவு மீதியும் காணப்பட்டதுடன் அம்மீதிகளை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு அல்லது தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டம், 1983 இன் 12 ஆம் இலக்க மிகையூதியக் கொடுப்பனவு அதிகாரச் சட்டம், 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் என்பன. | சபையின் நியதிச்சட்ட பொறுப்புக்களை முறைப்படியாக தீர்த்துவைக்கப்படாததன் காரணமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 381,475,552 தொகையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 32,367,337 தொகையும் தோட்ட தொழிலாளர்களின் சேமலாப நிதியத்திற்கு ரூபா 19,139,467 தொகையும் இலங்கை பெருந்தோட்ட ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கு ரூபா 3,200,018 தொகையும் செலுத்த வேண்டிய மிகையூதியம் ரூபா 512,688,406 தொகையும், வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்கள் ரூபா 502,339,067 தொகையும் உள்ளடக்கிய ரூபா 1,451,209,847 மொத்த தொகையான நியதிச்சட்ட பொறுப்புக்கள் காணப்பட்டன. |
| (ஆ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரிமையற்ற உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 30,000 வீதம் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,791,120 செலவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | முற்பணங்களானது உரிய செய்ற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 20,911,975 தொகையான முற்பணங்கள் ஒரு வருடத்தை மிகைத்துக் காணப்பட்டன. |
| (ஈ) 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண அதிகாரச்சட்டம் | ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து அடுத்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பொருளாதார சேவைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் பல ஆண்டுகளாக அவ்வாறு கொடுப்பனவு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 7,819,534 ஆகும். |
| (உ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி அதிகாரச் சட்டம் | வெளித்தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி ரூபா 8,549,879 தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது சபையில் வைத்திருக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (ஊ) | 1995 யூலை 21 ஆந் திகதிய அரசாங்க காணிகளை ஒப்படைத்தல் தொடர்பாக வழங்கப்பட்ட வழிகாட்டிக் கோவை | வழிகாட்டிக் கோவை இலக்கம் 08 இன் பிரகாரம் அரசாங்க காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் குத்தகைப் பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் 25 ஆண்டுகள் காலத்திற்கு 4825 சதுர அடியும் மற்றுமொரு நிறுவனத்திற்கு 5322 சதுர அடியும் 2003 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 30 ஆண்டுகள் காலத்திற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 563,961,014 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 443,532,303 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 120,428,711 பின்னடைவாகும். மீளாய்வாண்டில் பூர்த்தியான தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைதல் காரணமாக மொத்த இலாபம் ரூபா 28,228,298 ஆல் குறைவடைதல், கட்டிடங்கள் மற்றும் குத்தகை வாடகை வருமானம் ரூபா 95,819,181 ஆல் குறைவடைதல், ஏனைய வருமானம் ரூபா 48,226,325 ஆல் வீழ்ச்சியடைதல் என்பன மேற்கூறிய நிதி விளைவுகளின் பின்னடைவிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை நட்டம் அடையப்பெற்றிருந்தது. 2013 ஆம் ஆண்டில் ரூபா 676,285,352 தொகையான உயர்வான நட்டம் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது அது ரூபா 413,342,669 வரை குறைவடைந்திருந்தது. மீண்டும் 2015 ஆம் ஆண்டிலிருந்து நட்டம் படிப்படியாக அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு பதவியணியினர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி, பெறுமானத் தேய்வு என்பவற்றை மீண்டும் செம்மையாக்கும் போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 177,128,495 தொகையான மறைப் பங்களிப்பு உருவாகியிருந்தும் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை சாதகமான பங்களிப்புடன் ரூபா 666,532,742 வரை முன்னேற்றமடைந்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது அப்பங்களிப்பு மீண்டும் ரூபா 265,931,450 வரை குறைவடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) தரகர்களுக்குச் செலுத்திய வட்டி வருமானம் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 46 சதவீதத்தால் குறைவடைந்ததன் காரணமாக மீளாய்வாண்டில் நிதிச் செலவுகள் 21 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) சபையின் பிரதான உற்பத்திப் பொருட்களின் இலாபத் தன்மை மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றது.

| உற்பத்தி | மொத்தப் பங்களிப்பு | | |
|---|---|---|---|
| | 2016 | 2015 | 2014 |
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| தேயிலை | (374,060,186) | (416,531,996) | (309,250,507) |
| இறப்பர் | (23,958,649) | (18,419,436) | (19,453,637) |
| தெங்கு | (4,958,669) | (4,467,633) | (3,315,237) |
| இடைப் பயிர்கள் | 910,931 | 9,483,167 | 6,332,600 |
| ஜன ரீ | 3,200,522 | 2,841,547 | 2,401,614 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் பூர்த்தியான தேயிலை மற்றும் பச்சைத் தேயிலை மொத்த விற்பனையின் நட்டம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்கான இறப்பர் பால் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 84,267 கிலோகிராம்களால் அதிகரித்திருந்தும் உற்பத்திக் கிரயம் 14 சதவீதத்தால் அதிகரித்திருந்ததனால் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நட்டம் 30 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) மீளாய்வாண்டில் சந்தைப்படுத்தப்பட்ட தேங்காய்களின் அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 26,769 தேங்காய்களால் அதிகரித்திருந்ததுடன் வருமானம் 57 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. உற்பத்திக் கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17 சதவீதத்தால் அதிகரித்திருந்ததன் காரணமாக தேங்காய் உற்பத்தியின் பங்களிப்பு மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

(iv) குமாரவத்த தோட்டத்தின் கரும்பு பயிர்ச்செய்கை செயற்திட்டத்தின் மூலம் முன்னைய ஆண்டில் கிடைத்த ரூபா 5,179,517 வருமானம் மீளாய்வாண்டிற்கான இடைப்பயிர் பயிர்ச்செய்கையின் அடிப்படையிலான பங்களிப்பு குறைவடைந்தமைக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான கம்பனியின் முக்கிய விகிதங்களில் சில முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| விபரம் | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | -80% | -73% | -49% |
| தேறிய இலாப விகிதம் | -114% | -76% | -26% |
| நடைமுறை விகிதம் | 1:3.7 | 1:3.8 | 1:4.3 |
| விரைவுச் சொத்து விகிதம் | 1:4.2 | 1:4.2 | 1:4. |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் கம்பனியின் மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது முறையே 35 சதவீதத்திலிருந்து 65 சதவீதம் மற்றும் 76 சதவீதத்திலிருந்து 114 சதவீதம் வரையும் மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் சபையின் திரவத்தன்மை விகிதம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக தொழிற்படு மூலதனச் சிக்கல் உருவாகும் ஆபத்தும் காணப்படுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 செயலாற்றல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாய நடவடிக்கைகளிற்கு தேவையான இயந்திரங்களும் உபகரணங்களும் மற்றும் தொழிற்சாலைகளைத் தாபித்தல், பராமரித்தல், பேணுதல் என்பன சபையின் பிரதான குறிக்கோள்களாகும். அவ்வாறு செயற்படாத நிலையில் காணப்பட்ட 06 தொழிற்சாலைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 05 தோட்டங்களில் அமைந்துள்ள தேயிலைத் தொழிற்சாலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் உரிய தொழிற்சாலைக்குள் காணப்பட்ட ரூபா 7,639,107 புத்தகப் பெறுமதியான இயந்திரங்களும் உக்கிப் போகும் நிலையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 17 தோட்டங்களின் பூர்த்தியான ஒரு கிலோ தேயிலையின் பங்களிப்பை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் ரூபா 179 இலிருந்து ரூபா 533 வரையான வீச்சில் காணப்பட்டது. அதற்கிணங்க சபையினால் ஒரு கிலோ தேயிலையை உற்பத்தி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டியிருந்த ஆரம்பக் கிரயத்தை விற்பனை வருமானத்தின் மூலம் ஈடுசெய்ய முடியாததினால் மறைப் பங்களிப்பு உருவாகியிருந்தது.

(இ) தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் நியமத்தின் பிரகாரம் மத்திய மலைநாட்டுத் தேயிலை ஒரு ஹெக்டயருக்கான சராசரி விளைச்சல் 1200 கிலோகிராம் அளவாகும். மீளாய்வாண்டில் சபையில் ஒரு ஹெக்டயருக்கான பூர்த்தியான தேயிலை விளைச்சல் 221 கிலோ கிராமிற்கும் 508 கிலோகிராமிற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதுடன் அது தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் நியமத்தின் படியான சராசரி விளைச்சலாகிய 1200 கிலோ கிராமுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது. அவ்வாறே சபைக்குச் சொந்தமான கிரேட்வெலி தோட்டத்தைத் தவிர்த்து ஏனைய தோட்டங்களில் ஒரு ஹெக்டேயருக்கான பூர்த்தியான தேயிலை உற்பத்தியை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் குறைவடைந்திருந்தது.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

---

(அ) சபையினால் குத்தகைக்கு வழங்கியுள்ள ஆதனங்கள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கியிருந்த ஆதனங்களுக்காக அக்கம்பனியால் குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை செலுத்தப்படாததன் காரணமாக சபையினால் அக் கம்பனிக்கு எதிராக எஸ்/71049/2010 ஆம் இலக்க வழக்கு தொடுக்கப்பட்டிருந்ததுடன் 2011 பெப்ரவரி 02 ஆந் திகதி நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் குத்தகைக்காரரை உரிய ஆதனங்களிலிருந்து வெளியேற்றுவதற்கு தீர்ப்பு வழங்கபப்பட்டிருந்தது. குத்தகைக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆர்ஏ 39/2011 ஆம் இலக்க மேன்முறையீட்டு விண்ணப்பமும் தள்ளுபடியாக்கப்பட்டதன் காரணமாக உரிய சுற்றுப்புறத்தை 2014 ஒக்தோபர் 02 ஆந் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஜனவவசம உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது முகாமையாளரினால் (பதில்)னால் குத்தகைக்காரருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், குத்தகைக்காரரினால் உரிய ஆதனம் இந்த அறிக்கைத் திகதி வரை சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்காததுடன் அது சம்பந்தமாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ii) சபையினால் ஒரு தனியார் கம்பனிக்கு 23,989 சதுர அடியானது 2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இரண்டு ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய குத்தகை காலம் முடிவடைந்திருந்த போதிலும், புதிய குத்தகைக்கு உடன்படிக்கையில் கைச்சாத்திடாது அல்லது குத்தகைப் பணத்தை செலுத்தாது மீளாய்வாண்டின் இறுதி வரை குத்தகைக்காரர் கட்டிடத்தை பயன்படுத்திவந்தார்.

(iii) 2012 ஆகஸ்ட் 04 ஆந் திகதியிலிருந்து 04 ஆண்டு காலத்திற்காக ஒரு சதுர அடி ரூபா 60 ஆக 11500 சதுர அடியான ஒரு கட்டிடம் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதி உரிய குத்தகை காலம் முடிவடைந்திருந்தது. சபையின் பொது முகாமையாளரால் புதிய குத்தகை வாடகையாக மாதாந்தம் ரூபா 1,437,500 ஆக அறவிடுமாறு தொழில்நுட்ப நிறுவனத்திற்கு 2016 செப்தெம்பர் 03 ஆந் திகதி ஒரு கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தியிருந்த போதிலும் தொழில்நுட்ப நிறுவனம் அதற்காக இணக்கத்தை வெளிப்படுத்தாதிருந்ததுடன் பழைய குத்தகைப் பணமே செலுத்தப்பட்டு வந்தது. அதற்கிணங்க குத்தகை காலம் முடிவடைந்திருந்ததும் முறைப்படியாக மதிப்பீட்டினை மேற்கொண்டு மற்றுமொரு குத்தகைதாரருக்கு அக்கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(iv) 25 ஆண்டுகள் காலத்திற்காக 320 ஆம் இலக்கம் டாலி வீதியில் அமைந்துள்ள 14500 சதுர அடியான ஒரு கட்டிடம் 2003 ஆம் ஆண்டிலிருந்து ஒரு தனியார் கம்பனிக்கு ஒரு சதுர அடி ரூபா 13.50 ஆக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2005 ஒக்டோபர் 25 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படடிருந்தது. அந்த உடன்படிக்கையின் 3(ஏ) பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அரசாங்க மதிப்பீட்டாளரின் பிரகாரம் மாதாந்தம் குத்தகைப் பணம் இறவிடப்பட வேண்டிய போதிலும் சபையினால் உரிய குத்தகைப் பணம் அரசாங்க மதிப்பீட்டாளரின் பிரகாரம் அறவிடப்படாதிருந்ததுடன் குத்தகைதாரரால் பழைய குத்தகைப் பணமே மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்டு வந்தது.

(v) இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் பெருந்தோட்ட கைத்தொழில் கண்காணிப்பு பிரிவு துருசவிய நிதியம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு ஆகிய நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட ஜனவசம் தலைமை அலுவலகத்தின் கட்டிடத்திற்காக அறவிட வேண்டியிருந்த நிலுவையான குத்தகைப் பணம் ரூபா 14,248,699 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை உரிய குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. அந்த நிறுவனங்களை வெளியேறிச் சென்றதன் பின்னர் இக்கட்டிடங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததன் காரணமாக 2015 ஆம் ஆண்டிலிருந்து அக்கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அந்நிறுவனங்களிடமிருந்து இறுதியாக அறவிட்ட விலையின் பிரகாரம் 33567 சதுர அடிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் ஒரு ஆண்டிற்குப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த ரூபா 22,515,000 இற்கு அண்மித்த வருமானம் சபையினால் இழக்கப்பட்டிருந்தது.

(vi) எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு குத்தகை அடிப்டையில் வழங்கப்பட்டிருந்த இலக்கம் 520 டார்லி வீதியில் அமைந்துள்ள கட்டிடத்தின் முதலாம் மாடியில் 2572 சதுர அடிக்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒரு சதுர அடி ரூபா 60 ஆக குத்தகையினை அறவீடு செய்வதற்காக சபையினால் பட்டியல் வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை எதுவித குத்தகைப் பணமும் செலுத்தப்பட்டிருக்காததுடன் இரண்டு தரப்பினர்களாலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் ஆண்டறிக்கையிலுள்ள தரவுகளின் பிரகாரம் ஒரு ஹெக்டயருக்கு 550 இறப்பர் நாற்றுக்கள் காணப்பட வேண்டிய போதிலும் குமாரவத்த தோட்டத்தில் அப் பெறுமதி 200 இற்கும் 500 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(இ) சபையினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட துணைப் பதிவேடுகளின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிகளின் அளவு 2688 ஏக்கர்களாக இருந்ததுடன் அவற்றில் 313.9 ஏக்கர்களுக்குரிய குத்தகை வருமானம் மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் மிகுதியான காணிகளுக்குரிய குத்தகை வருமானத்தைக் கணித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) தற்போதைய அரசாங்கத்தின் பெருந்தோட்டக் கம்பனியாகிய எல்கடுவ தோட்டக் கம்பனிக்கு 2016 ஒக்தோபர் வரை ரூபா 7,328,456 பணம் ஒரு தனியார் கம்பனியால் தேயிலைக் கொழுந்துகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் ஒக்தோபர் 27 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர் ஒருவர் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் தலைவராக இருந்தும் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் சபையின் தேயிலைக் கொழுந்துகளை வழங்குவதற்காக அத்தனியார் கம்பனியால் செலுத்த வேண்டிய ரூபா 5,865,670 பணம் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் செயற்பட்டு வந்த ஹந்தான தேயிலைத் தொழிற்சாலை 2016 ஆம் ஆண்டில் மண்சரிவு ஆபத்துக் காணப்பட்டதன் காரணமாக வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தன. அதனை உறுதிப்படுத்துவதற்காக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபாரிசு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அத்தொழிற்சாலை தனியார் தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

**4.4 ஆளணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் நிரந்தரப் பதவியில் காணப்படும் வெற்றிடங்களுக்காகவே பதில் கடமை நியமனம் வழங்கப்பட வேண்டியதுடன் நியமன அதிகாரியால் நியமிக்கப்பட்டிருந்தால் மேலதிக ஊதியங்கள் செலுத்தப்படலாகாது. எனினும் 2015 நவம்பர் 23 ஆந் திகதியிலிருந்து உதவி தோட்ட அத்தியட்சகர் ஒருவர் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியல்லாத ஒரு பதவியான முகாமையாளர் (வன வளங்கள்) பதவியில் பதிற் கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக உரிய உத்தியோகத்தகருக்கு இரண்டு மேலதிக ஊழியர் படிகளைச் செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 500,153 செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2013 நவம்பர் 18 ஆந் திகதிய டீஎம்எஸ்/1696 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சபையின் முகாமையாளர் (சட்டம்) MM 1-1 சம்பள அளவுத்திட்டத்திற்குப் பொருத்தமான படிநிலையில் அமர்த்தப்பட வேண்டும் என

தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட இரண்டு சட்ட உத்தியோகத்தர்களுக்கு அதற்கு முரணாக ரூபா 100,000 மாதாந்தப் படியும் அதற்கு மேலதிமாக போக்குவரத்து மற்றும் எரிபொருள் படியாக ரூபா 30,000 தொகையும் செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,350,000 செலவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிதன்மையும் நல்லாட்சியும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 03 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த கணக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் 2017 நவம்பர் 22 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்படுதல்.<br>(ii) கொடுக்கல் வாங்கல்களை முறையாக இனங்கண்டு சரியாக பேரேட்டுக் கணக்குகளில் உள்ளடக்காமை.<br>(iii) கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்வதற்கு கவனம் செலுத்தப்படாமை. |
| (ஆ) குத்தகை ஆதனக் கட்டுப்பாடு | ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் வருமானங்களை அறவிடுதலில் சிக்கல்கள் காணப்படுதல் மற்றும் குத்தகை ஆதனங்களைப் பாதுகாப்பதில் குறைபாடுகள் காணப்படுதல். ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் பெறவேண்டிய குத்தகைப் பணத்தின் அளவை உறுதியாக இனங்காணக்கூடிய வகையில் பதிவேடுகள் பேணப்படாமை. |
| (இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | உற்பத்தியை அதிகரிப்பதற்கு மற்றும் உற்பத்திக் கிரயத்தை குறைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமை. |
| (ஈ) பதிவேடுகளைப் பேணுதல் | பணிக்கொடைக் கொடுப்பனவு பதிவேடு முறைப்படி நாளதுவரையாக்கப்படாததன் காரணமாக செலுத்தி முடிவுறுத்தப்பட்ட பணிக் கொடையை பதிவேட்டிலிருந்து நீக்காமை மற்றும் ஒரு ஊழியருக்கு ஒரு ஊழியர் இலக்கத்தினை விட அதிக அளவிலானவை வழங்கியிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |